10. திரு. ந. முத்துவேல்.

11. திரு. எம். கோபால்.

12. திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்.

சட்டப் பேரவையில் 215 (1) வது விதியின்கீழ் திரு. இ. எஸ். தியாகராசன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) குழுக்களின் தலைவர்கள் நியமனத்தில் கடைப் பிடிக்கப்படும் மரபு குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : இக்குழுக்களுக்கு தலைவர்களை நியமிக்கிற விஷயத்தில் ஏதாவது கன்வென்ஷன்ஸ் உண்டா? உங்களுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது. குறிப்பிட்ட கமிட்டிக்கு இந்த ஆர்டர்படி என்று ஏதாவது உண்டா?

Dr. H. V. HANDE : Sir, we would like to know the *Modus Operandi* adopted by the Hon. Deputy Speaker in the matter of appointment of Chairmen of these Committees. The Committee on Government Assurances point out the assurances given on behalf of the Government and prepare notes on that and so many things. We would like to be enlightened on the method adopted by the Hon. Deputy Speaker in selecting Chairman of this Committee. Of course he has the discretion. Last time it was from the Muslim League. The previous time it was I think from C.P.I., Mr. Manali was the Chairman. What is the method adopted ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கிணங்க இந்தக் கமிட்டிகளின் தலைவர்களை நியமிக்கிற பொறுப்பு தங்களுக்கு இருந்தாலும் கூட இதற்கு ஏதாவது முறைகள் இருக்கின்றனவா? அதிலும் குறிப்பாக இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியாக விளங்குகிற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் ஏதாவது, ஒரு சலுகை இல்லை என்று சொன்னாலும் கூட முறையான உரிமைகளாவது இங்கு வழங்கப்படுகிறதா என்பதைத் தாங்கள் அறிவிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில், சாதாரணமாக நம்முடைய சம்பிரதாயம் என்னவென்றால் பி. எ. சி. க்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகப் போடுவது வழக்கம். அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர்தான் பி. எ.சி. யின் சேர்மனாக இருப்பார்கள். மற்றக் கமிட்டிகளைப் பொறுத்தவரையில் பேரவைத் தலைவரின் டிஸ்க்ரிஷன் பொறுத்து நியமிப்பதுண்டு. இது உங்களுக்குத் தெரியும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களிடம் சில விளக்கங்களைக் கேட்டார்கள். பொதுவாக, அங்கீரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக இருந்தால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனாக அதன் தலைவரே வருவார்கள். அப்படி ஒரு அமைப்பு அமையாத காரணத்தால் இது ரொட்டேஷன் முறையில் கொடுத்துக்கொண்டு வரப்படுகிறது. முதல் ஆண்டு காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்தோம். அடுத்த ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொடுத்தோம். இப்போது பார்வேர்ட் ப்ளாக் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வரிசையாக வரும். அப்படிப் பார்க்கிறபோது தமிழரசுக் கழகத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்றால் கிடைக்காது நம் பதவின் காலத்திற்குள். ஆகவே அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு போன தடவை லீகிற்குக் கொடுத்ததைப் போல் இந்தத் தடவை தமிழரசுக் கழகத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் முறைகேடு இல்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி இல்லை என்றாலும் தோழமை எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. உண்மையான எதிர்க்கட்சிகளும் இருக்கின்றன.

Public Accounts Committee is a very important Committee இன்று பார்வேர்ட் ப்ளாக் அல்லது முஸ்லீம் லீக்-க்குக் கொடுப்பார்களேயானால் தோழமை எதிர்க்கட்சிக்குக் கொடுப்பார்களா அல்லது உண்மையான எதிர்க்கட்சிக்குக் கொடுப்பார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : I take objection to that. What does she mean by that?

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் நாளைக்கு நீங்கள் கூட தோழமைக் கட்சியாகலாம்.

1973 மார்ச் 31]

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the Public Accounts Committee is a very important Committee. The Chairmanship of that Committee—you must give to a real Opposition Block.

MR. DEPUTY SPEAKER: It is not in my discretion to distinguish between real opposition and pseudo-opposition.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பி. ஏ.ஸி. பொறுத்தவரையில், முதலில் காங்கிரஸ்க்குக் கொடுத்த பிறகு அடுத்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுத்து, இப்போது பார்வேர்ட் ப்ளாக் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரிசையாக வரும். அந்த வகையில்தான் பி. ஏ. ஸி. பொறுத்தவரையில் முறை கையாளப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்தக் கமிட்டி சேர்மன்ஷிப் பற்றியும் கவலைப்படவில்லை. கேட்கவில்லை. வேண்டாம். we do not bother about it. நாங்கள் கெஞ்சிக்கேட்கிறமாதிரி இல்லை. நமக்கு தேவை இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேவையில்லை, அதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றெல்லாம் சொல்வது நல்லதல்ல. ஏனென்றால், முதலில் நிறுவன காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவர்கள் தலைவராக இருந்து இருக்கிறார்கள், அடுத்தபடியாக இந்திய கம்யூனிஸ்ட்க் கட்சியின் சார்பில் தலைவராக இருந்திருக்கிறார்கள், இப்படி வரிசைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தது லீக், அடுத்தது சுதந்திரா வரலாம். அதற்குப் பிறகு ஆளும் காங்கிரஸ் கட்சி, பிறகு அ. தி. மு. க. வரலாம். இப்படி வரிசையாக ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கவேண்டுமென்று கொடுக்கிறோம். எதிர்க்கட்சிக்குத் தரக்கூடாது என்பதல்ல. முதலில் காங்கிரஸ், அடுத்து கம்யூனிஸ்ட் கட்சி, மூன்றாவதாக பார்வேர்ட் ப்ளாக் என்று தரப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய கொறடா அவர்களிடத்திலும் கேட்டோம். அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு முஸ்லீம் லீக்கிற்கு கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தடவை கேட்கலாம் என்றால் நாங்கள் உரிமையோடு கேட்கலாம். காரணம், தேர்தலில் நாங்களும், பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சியும் கட்சி ரீதியாக உங்களை எதிர்த்து, உதய சூரியனை எதிர்த்து நாங்கள் வந்திருக்கிறோம், 1971-ல். ஆகவே நாங்கள் கேட்கலாம். ஆனால் நாங்கள் வற்புறுத்தவில்லை. இதை ஒரு பெரிய இஷ்யூ ஆக ஆக்கவில்லை. நாங்கள்தான் அதையெல்லாம்

தட்டிக்கேட்கிறோம். 'அஷ்யூரன்ஸ்' என்றால் தட்டிக்கேட்பது என்று அர்த்தம். அரசாங்கம் அதை நிறைவேற்றிவிட்டதா என்று கேட்பதாக அர்த்தம். அதை எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்கவேண்டும். சில நேரங்களில் அது முடியாமல போகலாம். பாராளுமன்றத்தில்கூட திரு. செழியன் அவர்களுக்கு பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி தலைவர் பதவி கொடுத்தார்கள். தோழமை கட்சி என்று இருந்தாலும் கொடுத்தார்கள். பொதுவாக, 'அன்டர்ஸ்டாண்டிங்' பேரில் தான் தருகிறீர்கள். எலெக்ஷன் என்று வைத்தால் எங்களுக்கு ஒரு சீட் கூட கிடைக்காது. அது தெரியும்.

We are only six. We are grateful to the ruling party for certain things.

நாங்கள் வற்புறுத்திக் கேட்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

(6) தன்னிலை விளக்கம்.

மதுரை டிரஷரி ஆபீசர் பற்றி திரு. சுப்பு கூறியது பற்றி—வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற 23—3—1973-ம் நாள் மாண்புமிகு கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே என்னைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். நான் அன்றைதினம் சபையில் இல்லாததால் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பு பேசுகிறபோது என்னுடைய உறவினர் ஒருவர் மதுரையில் டிரஷரி ஆபீசராக இருக்கிறார் என்றும், அவருக்கு நான் அதிகச் சலுகை காட்டியிருப்பதாகவும் இங்கே பேசியிருக்கிறார்கள். அதை ஒட்டி "அமைச்சர் அன்பிலின் உறவினருக்குச் சலுகை, சுப்பு குற்றச்சாட்டு" என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. பொதுவாக அவர் சொல்லியிருக்கின்றார். திரு. ராமதாஸ் அவர்கள் உண்மையிலேயே என்னுடைய உறவினர் அல்ல. தெரிந்தவரும் அல்ல. எனக்குக் கிடைத்த விவரங்களிலிருந்து ஒன்று தெரிகிறது. அவர் மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்று தெரிகிறது. நண்பர் சுப்பு, அவர்கள் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்பதால் எனக்கு உறவினர் என்று சொல்லியிருந்தால், அவர்கள் அத்தனை பேரும் எனக்குச் சொந்தக்காரர்கள் என்ற பொருளில் சொல்லி இருந்தால் உண்மையிலேயே பெருமையோடு அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.